மிக முக்கியம் : 2023 ஆகஸ்ட் 04ம் திகதி

சிசு சவிய 2023

5

5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் I **1 மணித்தியாலம்**

பெயர் :.....

சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

பாடசாலை அதிபர் / ஆசிரியர்களுக்கு,

- இவ்வினாப்பத்திரத்தை பிரதியிட்டு 2023 ஆகஸ்ட் 4ம் திகதி உங்கள் பாடசாலையின் தரம் 05 சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள்,பிரச்சினைகள் இருப்பின் தங்களது கோட்டத்திற்கு பொறுப்பான ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் மாகாண ஆரம்பப்பிரிவிற்கு அழைத்து ஆலோசனைகளை பெறுங்கள்.
- விடைப்பத்திரம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- வேறு மாகாண மாணவர்களும் இவ்வினாப்பத்திரத்தின் பயனைப் பெறலாம்.
- இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி.

- மாகாண பணிமனையினால் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு அமைய புள்ளிகளை பதிவு செய்யுங்கள்.
  - 2023 ஆகஸ்ட் 4ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.

வினாத்தாள் II 1மணித்தியாலமும் 15 நிமிடமும்	வினாத்தாள் I 1மணித்தியாலம்

- புள்ளி பகுப்பாய்வின் பின் மாணவர்களுக்கான இனங்காணப்பட்ட மேலதிக கற்றல் மேம்பாடுகளை மேற்கொள்க.
- இவ்வினாப்பத்திரத்தை எழுத சந்தர்ப்பம் இல்லாத மாணவர்களுக்கு வீட்டிலிருந்து செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப்பிரிவு

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

புலமைப்பரிசில் பரீட்சை

நுண்ணறிவு

செவ்வாய் மற்றும் வியாழன்

காலை 5.00 மணி



zoom


Video Recording தரப்படும்

மாதக்கட்டணம் - 700/=

More Info - 76667-4945

✷ தரப்பட்டுள்ள படங்களை அவதானிக்க. 1 ஆம் 2 ஆம் வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க.

01. கட்டத்தில் உள்ள படத்திற்கு ஒத்த படத்தை தெரிவு செய்க.





1




2



3

02. A போன்ற படத்தைப் பெறுவதற்கு **B** இல் எத்தனை மாற்றங்களை செய்ய வேண்டும்.



A படம்



B படம்


1. 2 2. 3 3. 4

3. முதலில் தரப்பட்டுள்ள உருவை முழுமையாக்குவதற்கு சேர்க்கப்பட வேண்டிய பகுதியைத் தெரிவு செய்க.





1



2



3

- கட்டங்களில் சில எண்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி 4 ஆம் 5 ஆம் வினாக்களுக்கான விடைகளை தெரிவு செய்க.

3	18	B	24	50	55
6	15	25	C	45	
A	12	20	35	40	
5	10	15	D		70

04.கட்டங்களில் A மற்றும் B எழுத்துக்களுக்கு வரவேண்டிய எண்கள் முறையே,

1. 9 மற்றும் 20 2. 9 மற்றும் 21 3. 11 மற்றும் 21

05.கட்டங்களில் C மற்றும் D எழுத்துக்களுக்கு தொடர்புடைய எண்கள் முறையே,

1. 45 மற்றும் 75 2. 40 மற்றும் 65 3. 30 மற்றும் 80

www.ikeguru.lk

06. ஒரு இயந்திரம் வெவ்வேறு வர்ணங்களில் இறப்பர் பந்துகளை உற்பத்தி செய்கின்றது. அந்த இயந்திரம் ஒவ்வொரு 6 பந்துகளுக்கும் ஒரு நீலநிற பந்தை உற்பத்தி செய்கின்றது. அதன்படி 8 நீலநிற பந்துகள் உற்பத்தி செய்யப்படும் போது இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படும் இறப்பர் பந்துகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 54 2. 48 3. 56

- **ஒரு குறிப்பிட்ட அடுக்கு மாடிக் குடியிருப்பில் A , B , C என மூன்று வீடுகள் இருந்தன. அவ் வீடுகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.**
  - C வீட்டில் இருப்பதைப் போன்று இரு மடங்கு B வீட்டில் இருக்கின்றார்கள்.
  - B மற்றும் C ஆகிய வீடுகளில் உள்ளவர்களின் கூட்டுத்தொகை A வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு சமனாகும்.
  - B வீட்டிலிருந்து ஒருவர் C வீட்டிற்குச் செல்லும் போது C வீட்டிலுள்ளவர்களின் எண்ணிக்கை 5 ஆக மாற்றமடையும்.

07. A வீட்டிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 10 3. 12

- **குமாரி ஒரு பிஸ்கட் பெக்கட்டை வாங்கினாள். அதில் 3 வகையான பிஸ்கட்டுக்கள் இருந்தன. சொக்லைட் பிஸ்கட்டுக்களின் எண்ணிக்கை 8 ஆகும். மிகுதி பிஸ்கட்டுகளில் ⅓ கஸ்டட் கிரீம் பிஸ்கட் ஆகும். மீதமுள்ள பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை 12 ஆகும்.**

08. அங்குள்ள கஸ்டட் பிஸ்கட்டுகளின் எண்ணிக்கை யாது?

1. 8 2. 6 3. 9

09. அங்குள்ள 3 வகையான பிஸ்கட்டுக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 24 2. 25 3. 26

10. **நல்ல நல்ல பாடலை**
நாமும் கூடிப் பாடுவோம்
நல்ல நல்ல அறிவினை
நாமும் கற்று ஆடுவோம்

இப்பாடலடிக்குப் பொருத்தமான கருத்தைத் தரும் விடையைத் தெரிவு செய்க.

1. பாடல்களை சேகரித்து வைத்தல்.
2. நாம் ஞானத்தினை தேடிக் கொள்ளல்.
3. திறமையாக நடனம் ஆடுதல்.

- **கீழேயுள்ள தகவல்களைக் கொண்டு 11 மற்றும் 12 ஆகிய வினாக்களுக்கு விடைகளைத் தெரிவு செய்க.**
  - **சதீஸ் , சரண் , லோசன் , புவேக்ஷான் மற்றும் ருக்ஷான் ஆகிய ஐந்து பாடசாலை மாணவர்கள் உள்ளனர்.**
  - **சதீஸ் மற்றும் ருக்ஷான் நீல நிற பாடசாலை புத்தகப் பைகளையும் வைத்துள்ளனர். மற்றைய மாணவர்கள் கருப்பு நிற பைகளை வைத்துள்ளனர்.**
  - **சதீஸ் மற்றும் புவேக்ஷான் அவர்களின் பைகளில் சிவப்பு நிற வட்டவடிவ சின்னங்களும் ருக்ஷான் மற்றும் சரண் இவர்களின் பைகளில் மஞ்சள் நிற முக்கோண வடிவான சின்னங்களும் ஒட்டப்பட்டுள்ளன.**

11. இவ்வாறு சிவப்பு நிற வட்டத்துடன் நீல நிற பையுடைய மாணவன் யார்?


1. சதீஸ் 2. சரண் 3. புவேக்ஷான்

www.ikeou.lk

12. .மேற்கண்ட தகவல்களின் படி தவறான கூற்றாகக் கருதப்படுவது யாது?
    1. ருக்ஷான் மஞ்சல் நிற முக்கோண சின்னத்துடன் நீல நிற பையை வைத்துள்ளான்.
    2. புவேக்ஷான் சிவப்பு நிற வட்ட சின்னத்துடன் கருப்பு நிற பையை வைத்துள்ளான்.
    3. லோசன் நீல நிற முக்கோண சின்னத்துடன் கருப்பு நிற பையை வைத்துள்ளான்.

13. தேஜேஸ் பி.ப 5. 00 மணிக்கு வீட்டிற்குச் சென்ற போது அவரது நிழல் இடது கை பக்கம் விழுந்தது. தேஜேஸ் சென்ற திசை யாது?
    1. தெற்கு 2. வடக்கு 3. கிழக்கு


14. 510 , 294 மற்றும் 53 , 467 ஆகிய எண்களை இடமிருந்து வலமாகவும் 595 மற்றும் 420 எண்களை மேலிருந்து கீழாகவும் நிழற்றப்படாத கட்டங்களை நிரப்பும் போது 4 வது நிரலில் மேலிருந்து கீழாக வரும் எண் யாது?
    1. 69
    2. 74
    3. 420



15. ஒரு விழாவில் வீதியின் இரு பக்கத்திலும் மின்குமிழ் கொடிகள் தொங்கவிடப்பட்டன. மின்குமிழ்கள் தொங்கவிடப்படும் இரு மின் கம்பங்களுக்கிடையிலான தூரம் 3m 50cm ஆகும். வீதியின் ஒரு பக்கத்திற்கு 4 மின் கம்பங்கள் காணப்படுமாயின் வீதியின் இருபுறமும் தொங்கவிட தேவையான கொடியின் நீளம் யாது?
    1. 28m 2. 21m 3. 28m 50cm


16. படத்தில் காணப்படும் தராசு சமமாக காணப்பட்டன. எனின் ■ குறியீட்டுக்கு சமமான உருக்கள் அடங்கிய விடை யாது?

    1. ▲ ● 2. ▲▲ 3. ▲ ▲ ●



17. ரொக்ஷான் பிறந்த தினத்தின் போது அவருடைய தாயிற்கு 25 வயதாகும். ரொக்ஷானின் தம்பி பிறக்கும் போது தாயிற்கு 29 வயதாகும். ரொக்ஷானுக்கு 10 வயதாகும் போது அவரது தம்பிக்கு இப்போது எத்தனை வயதாகும்?
    1. 4 2. 5 3. 6

18. விரிக்கப்பட்ட தாயக்கட்டையின் முகம் படத்தில் தரப்பட்டுள்ளது. முகங்களில் எண்கள் எழுதப்பட்டுள்ளன. இதன் எதிர்ப்பக்கங்கள் அதன் மடங்குடன் தொடர்புபட்டது. எனவே இடைவெளிக்கு வரவேண்டிய எண் யாது?



    1. 25 2. 20 3. 30

19. அறிவு திறன் போட்டியில் ஒரு சரியான விடைக்கு 10 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு தவறான பதிலுக்கும் 5 புள்ளிகள் குறைக்கப்படும். 10 வினாக்களுக்கு விடையளித்த மாணவன் 6 வினாக்களுக்கு சரியாக பதிலளித்தான். எனின் எத்தனை புள்ளிகள் பெற்றிருப்பான்?
    1. 40 2. 45 3. 55

www.ikedu.lk

20. பெட்டியில் 1800 l நீர் உள்ளது. அதில் ஒரு துளையிலிருந்து 2 நிமிடங்களுக்கு 6 l நீரை அகற்றுகின்றார்கள். தொட்டியிலுள்ள நீர் முழுமையாக வெளியேற எவ்வளவு நேரம் எடுக்கும்?

1. 12 மணி
2. 10 மணி
3. 15 மணி

21. வங்கியில் காசு வைப்பிலிடுவதற்காக சென்ற மேனு அவருக்கு முன்னாடி 15 பேர் இருப்பதை அவதானித்து வரிசையில் நின்றார். அவசர நிலை காரணமாக வரிசையிலுள்ளவர்கள் பின்புறமாக திரும்பினார்கள். இதன் காரணமாக இறுதியாக இருந்தவர் முதலாவதாக நிற்கின்றார். மேனுவிற்கு முன்னதாக 7 பேர் இருக்கின்றனர். அந்த வரிசையில் இருந்த நபர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1. 22
2. 23
3. 24

22. கடிகாரம் ஒன்று ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கும் 10 நிமிடம் தாமதமாகக் காட்டுகிறது. அந்த கடிகாரம் மு.ப 6. 00 மணிக்கு சரியான நேரத்தைக் காட்டுகிறது. எனின், இக் கடிகாரம் பி.ப 6. 00 மணியைக் காட்டும் போது சரியான நேரம் யாது?

1. பி.ப 4. 00
2. பி.ப 7. 00
3. பி.ப 8. 00

23. 12m நீளமுடைய இரும்புக் குழாய் ஒன்றின் நிறை 240kg எனின், 180kg உடைய இரும்புக் குழாயின் நீளம் யாது?


1. 8m
2. 9m
3. 10m



24. ராகுலின் உண்டியலில் இருந்த மொத்த தொகை ரூபாய் 408.00 ஆகும். இதில் இருந்த நாணயக்குற்றிகளின் எண்ணிக்கை சமனாகக் காணப்பட்டது. எனின், உண்டியலிலுள்ள மொத்த நாணயக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?



1. 18
2. 21
3. 24


25. கீழே காணப்படும் உருவை புள்ளிக் கோட்டு வழியே வெட்டிய பின்பு வெட்டப்பட்ட பகுதியின் தோற்றம் யாது?



1. 
2. 
3. 

www.lkedu.lk

26. இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 15
2. 16
3. 17

- **தனூசியின் நிறை 30kg ஆகும். சுகியின் நிறை தனூசியை விட 5kg நிறை அதிகம். ஆனால் கீதாவை விட 9kg குறைவு**

27. இக் கருத்துப்படி சரியான கூற்று யாது?

குறைவு < அதிகம்

1. தனூசி < சுகி < கீதா
2. சுகி > கீதா < தனூசி
3. தனூசி > சுகி > கீதா

28. கீதாவின் நிறை யாது?

1. 35kg 2. 38kg 3. 44kg

- **திலுக்ஷன் ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 4m தூரத்திற்கு மேற்கு நோக்கி சென்று அங்கிருந்து 6m தூரத்திற்கு வடக்கு நோக்கி சென்று அவ்விடத்திலிருந்து 6m தூரம் கிழக்கு நோக்கி செல்கிறான்.**


29. திலுக்ஷன் இப்போது இருப்பது ஆரம்ப இடத்திற்கு எத்திசையிலாகும்?

1. வடக்கு 2. நிருதி மூலை 3. ஈசான மூலை


30. மீண்டும் ஆரம்ப இடத்திற்கு வருவதற்கு சுவர் எவ்வாறு வரவேண்டும்?


1. தெற்கு நோக்கி 6m சென்று பின்னர் 2m மேற்கு நோக்கி செல்ல வேண்டும்.
2. 4m வடக்கு நோக்கியும் பின்பு 2m கிழக்கு நோக்கிச் செல்ல வேண்டும்.
3. தெற்கு நோக்கி 6m சென்று பின்னர் 2m கிழக்கே செல்ல வேண்டும்.

31. இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



1. 155 , 42 2. 150 , 42 3. 150 , 46

32.  = 49 எனின்,

 = ...

1. 28 2. 21 3. 35


www.ikedu.lk

33. கீழேயுள்ள வரைபடத்தின் படி மரம் , பூ , மரம் , பூ என்ற வரிசையில் 3 மரங்கள் 3 பூக்களை ஒழுங்கு முறையில் வைக்க குறைந்தபட்சம் எத்தனை படங்களை மாற்ற வேண்டும்?



1. 2
2. 3
3. 4

34. உருவிலுள்ள நிறந்தீட்டப்பட்ட கட்டங்களை அவதானித்து ஒன்று விட்டு ஒன்று நிறந்தீட்டும் போது நிறந்தீட்டப்பட்ட முழு கட்டங்கள் எத்தனை?



1. 16
2. 24
3. 32

35. வரிசையொன்றில் வெள்ளை , நீல நிற ஆடைகளை அணிந்த குழந்தைகள் மாறி மாறி இருக்கின்றனர். முதலாவதாக வெள்ளை நிற ஆடை அணிந்தவராவார். வரிசையில் இறுதி 5 குழந்தைகள் நீல நிற ஆடை அணிந்தவர்களாவர். அங்குள்ள மொத்த குழந்தைகள் 38 ஆகும். ஆகவே அவ் வரிசையில் நீலம் மற்றும் வெள்ளை ஆடையணிந்த குழந்தைகளின் எண்ணிக்கை முறையே,
    1. 21 நீலம் 17 வெள்ளை
    2. 17 நீலம் 21 வெள்ளை
    3. 20 நீலம் 18 வெள்ளை

36. கயிற்றில் சிவப்பு , நீலம் , ஊதா ஆகிய நிற பலூன்கள் தொடரொழுங்கில் தொங்கவிடப்பட்டுள்ளன. அக்கயிற்றில் 213 பலூன்கள் இருக்கின்றதெனின் அங்கு காணப்படும் சிவப்பு மற்றும் ஊதா நிற பலூன்களின் எண்ணிக்கைகள் முறையே அமைவது,
    1. 53 , 54
    2. 53 , 53
    3. 54 , 53


www.ikedu.lk

37. மேசையின் மேல் கொய்யா , ஸ்ரோபரி , அப்பிள் ஆகிய பழங்கள் 3 உள்ளன. அம்மா கொய்யா மற்றும் அப்பிள் பழத்தையும் , அப்பா கொய்யாப் பழத்தையும் உதினி 3 வகைப் பழங்களையும் விரும்புகின்றனர். மூவருக்கும் பிரித்துக் கொடுத்தால் அம்மாவுக்குக் கிடைக்கும் பழம் எது?

1. கொய்யா 2. ஸ்ரோபரி 3. அப்பிள்


- **நகரம் ஒன்றில் அமைந்துள்ள இடங்கள் சிலவற்றின் அமைவிடங்கள் கீழே தரப்பட்டுள்ளது.**

38. பள்ளிவாசலில் இருந்து பாடசாலையினூடாக கடையைக் கடந்து வீட்டிற்குச் சென்று மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு வரும் ஒருவர் செல்ல வேண்டிய மொத்த தூரம் யாது?



1. 28 km
2. 30 km
3. 32 km

- **நீலம் , அகலம் மற்றும் உயரம் 16cm உடைய இந்த சதுரக் குற்றிக்கு எல்லா பக்கமும் சிவப்பு நிறம் பூசப்படுகிறது. இந்த பெரிய சதுரக் குற்றியில் 4cm பக்கம் கொண்ட சிறிய சதுரக் குற்றிகள் வெட்டியெடுக்கப்படுகிறது?**



39. வெட்டப்பட்ட சிறிய சதுரக் குற்றிகள் எத்தனை?

1. 27 2. 46 3. 64

40. வெட்டிய பின் 3 பக்கம் நிறம் பூசப்பட்ட சிறிய சதுரக் குற்றிகள் எத்தனை?

1. 8 2. 10 3. 12

www.ikeou.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல

- ICT
- Maths
- English
- Tamil
- History
- Science

zoom Online வகுப்புக்கள்

" மகத்தான கல்விக்கு உங்கள் ஆசான் "





Contact

76667-4945

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5
வரை நடைபெறுகின்றன

மிக முக்கியம் : 2023 ஆகஸ்ட் 04ம் திகதி

சிசு சவிய 2023

5

5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை

சப்பிரகமுவ மாகாணம்

முன்னோடிப் பரீட்சை

வினாத்தாள் II **1 மணித்தியாலமும் 15 நிமிடமும்**

பெயர் :.....

சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

பாடசாலை அதிபர் / ஆசிரியர்களுக்கு,

- இவ்வினாப்பத்திரத்தை பிரதியிட்டு 2023 ஆகஸ்ட் 4ம் திகதி உங்கள் பாடசாலையின் தரம் 05 சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின் தங்களது கோட்டத்திற்கு பொறுப்பான ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் மாகாண ஆரம்பப்பிரிவிற்கு அழைத்து ஆலோசனைகளை பெறுங்கள்.
- விடைப்பத்திரம் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- வேறு மாகாண மாணவர்களும் இவ்வினாப்பத்திரத்தின் பயனைப் பெறலாம்.
- இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி.

- மாகாண பணிமனையினால் வழங்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு அமைய புள்ளிகளை பதிவு செய்யுங்கள்.
- 2023 ஆகஸ்ட் 4ம் திகதி பாடசாலையிலிருந்து விடையளிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கவும்.

வினாத்தாள் II 1மணித்தியாலமும் 15 நிமிடமும்	வினாத்தாள் I 1மணித்தியாலம்

- புள்ளி பகுப்பாய்வின் பின் மாணவர்களுக்கான இனங்காணப்பட்ட மேலதிக கற்றல் மேம்பாடுகளை மேற்கொள்க.
- இவ்வினாப்பத்திரத்தை எழுத சந்தர்ப்பம் இல்லாத மாணவர்களுக்கு வீட்டிலிருந்து செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கவும்.

சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக்கல்விப்பிரிவு

www.moe.gov.lk

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சிற்றூர் என்ற கிராமத்தில் சில ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அந்த ஊரில் கடும் பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். நல்ல உள்ளம் கொண்ட செல்வந்தர் ஒருவர் தினமும் அவ்வூர் மக்களுக்கு மதிய உணவை வழங்க விரும்பினார். இளகிய உள்ளம் கொண்ட அவர் " இந்த ஊரில் உள்ளவர்கள் யாரும் பசியால் வாட வேண்டாம். தினமும் மதிய **உணவு வழங்க ஏற்பாடு செய்கின்றேன்**" என்று ஊர் பெரியவர்களிடம் கூறினார்.

1. மழை பெய்யாமல் இருந்த கிராமம் எது? .....

2. மழை இல்லாமையால் யாது நிலவியது ? .....

3. ஊர் மக்களுக்கு மதிய உணவு வழங்கவிரும்பியவர் யார்?

.....

4. பந்தியில் இடம் பெற்றுள்ள பெயர் அடைமொழி சொல் ஒன்றை எழுதுக. .....

5. சிற்றூர் என்ற சொல்லை பிரித்து எழுதுக. .....

6. பந்தியில் அடிகோடிட்ட பகுதியை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

.....

(06 புள்ளிகள்)

02. கீழ் உள்ள வாக்கியங்களில் எழுவாய், பயனிலை தொடர்புகள் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.

1. நான் பாடல் பாடினேன். (.....)
2. அவள் பூமாலை கட்டினான். (.....)
3. மூத்தோரை மதிக்க வேண்டும். (.....)
4. பட்டம் வானில் பறந்தன. (.....) (02 புள்ளிகள்)

03. பொருத்தமான நிறுத்தற் குறிகளை உரிய இடத்தில் இடுக.

தமிழ் ஆசிரியர் அழகின் சிறப்பு என்ற பாடலைப் பாடிக்காட்டினார்

04. 1. கீழே தரப்பட்டுள்ள உவமைத்தொடரைப் பூர்த்தி செய்து எழுதுக.

நகமும் ..... போல.

2. பின்வரும் பழமொழிக்கான கருத்தை எழுதுக.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. .....

05. பின்வரும் தொடர்மொழிக்கு ஒரு மொழியை தருக.

ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் .....

06. பின்வரும் தொடரிலுள்ள உவமானத்தின் கீழ் கோடிடுக.

சூரியன் தங்கத்தகடு போல மேலெழுகின்றான்.

www.ikedu.lk

07. பின்வருவனவற்றில் சரியாக எழுத்துக்கூட்டப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக.

1. கைமாறு, கைம்மாறு , கைம்மாரு

2. நச்சத்திரம் , நட்ச்சத்திரம் , நட்சத்திரம்

08. பின்வரும் வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக .

பெண்கள் வயலில் வேலை செய்தார்கள் . .....

09. மாறிக் கிடக்கும் சொற்களைக் கொண்டு சரியான வாக்கியம் எழுதுக.

மாடியிலிருந்து / ஒருவர் / தள்ளிக்கொண்டு / அவர்கள் /இறங்கினர் / ஒருவரை

.....

10. பின்வரும் விடுகதைக்கான விடையை எழுதுக.

காற்று நுழைந்ததும் கானம் பாடுவான் அவன் யார்? .....

11. சொற்களுக்குரிய இளமை மரபு பெயரை எழுதுக.

1. யானை - .....

2. வேம்பு - .....

12. பின்வரும் கட்டத்தில் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக .

வானம் , நூல் , தலைவன் , பூட்டு , சீரகம்

1. சங்கிலிக்கொம்பு இடம்பெற்றுள்ள சொல்லை எழுதுக. .....


2. விசிறியும் சுழியும் இடம்பெற்றுள்ள சொல்லை எழுதுக . .....


3. மடக்கேறும் அரவும் இடம்பெற்றுள்ள சொல்லை எழுதுக . .....

13. பின்வரும் இணைமொழிகளை எழுதுக

1. நீட்டி ..... (15 புள்ளிகள்)

14. கீழே உள்ள படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.

1. 

2. 

....

15. கீழ் உள்ள சொற்களைக் ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியம் எழுதுக.

1. dog / My / legs / has / four

.....

2. many / brothers / How / do / have ? / you

.....

www.ikedu.lk

16. பின்வரும் ஒவ்வொரு ஆங்கில சொற்களுக்குரிய தமிழ் சொல்லை எழுதுக.

1. blackboard - ..... 2. watermelon - .....

(06 புள்ளிகள்)

17. 1. ''யஹலுவா'' என்ற சிங்கள சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக. .....


2. கீழ் உள்ள வாக்கியம் சிங்களத்தில் கூறும் விதத்தினை தமிழ் மொழியில் எழுதுக.

கண்களை மூடுங்கள் - ..... (02 புள்ளிகள்)

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

18. 1. தரப்பட்டுள்ள எண்சட்டம் குறிக்கும் எண்ணுடன் 14 ஐ கூட்டி அதன் எண்பெயரை எழுதுக.


.....



2. ''அறுபத்தெட்டாயிரத்து ஒன்பது'' **எண் குறியில்** எழுதுக. .....

19. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

39 135 , 39 350 , 38 243 - .....

20. 

1. கட்டத்தில் தரப்பட்டுள்ள பழங்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.

.....

2. தோடம்பழத்தை விட கூடுதலாகக் காணப்படும் அப்பிள் பழங்களின் மொத்த எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக.

.....

21. ருவன் மு.ப 12.45 இற்கு வெளிநாடு செல்லப் புறப்பட்டான். இதனை நியம நேரத்தில் எழுதுக.

22. கீழே தரப்பட்டுள்ள உருவில் ¾ ஐ நிழற்றுக.



23. விரலிக்காய்கள் 48 இல் ½ பகுதி பழுத்தவையாகும். பழுக்காத காய்கள் எத்தனை.....

24. யாத்திரிகர் குழுவொன்று தனது பயணித்தில் 32km 150m தூரத்தை பேருந்திலும் மீதி தூரத்தில் 69km 900m தூரத்தை புகையிரதத்திலும் பயணித்தனர்.


1. அவர்கள் பயணித்த மொத்த தூரம் யாது? .....

2. அவர்கள் பேருந்தில் பயணித்த தூரத்தை விட புகையிரதத்தில் பயனித்த தூரம் யாது?

.....


www.ikedu.lk

25. மூன்று பாத்திரங்கள் கொள்ளும் நீரின் அளவு தரப்பட்டுள்ளது. அம்மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் மொத்த அளவை மில்லிலீற்றரில் எழுதுக.



.....ml

26. கீழே தரப்பட்டுள்ள வடிவங்களைக் கொண்டு விடை எழுதுக.



1. மேலேயுள்ள உருக்களில் இரண்டு சமச்சீர் அச்சுகளைக் கொண்ட உரு குறிக்கும் எழுத்தை எழுதுக .....

2. சமனான சமச்சீர் அச்சுகளை கொண்ட உரு குறிக்கும் எழுத்தை எழுதுக.
.....


27. 1. கீழே தரப்பட்டுள்ள சிட்டையைப் பூரணப்படுத்துக.

பொருட்கள்	வாங்கிய அளவு	1kgஇன் விலை	பெறுமதி
		ரூபாய் சதம்	ரூபாய் சதம்
சீனி	2 kg	…….....	440 00
கடலை	…….	280 00	140 00
மிளகாய்	200 g	550 00	…….
மொத்தம்			…….


2.மேலே சிட்டையிலுள்ள பொருட்களை வாங்கிய பின் ரூபாய் 1000 பணத்தினைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது?

.....

28. 1.கீழே தரப்பட்டுள்ள வெட்டுருக்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய திண்ம வடிவங்களைப் பெயரிடுக?




.....



.....

2. கீழே தரப்பட்டுள்ள திண்மத்தின் திட்டத்தை நிறம் தீட்டுக.



29. 610 புத்தகங்களை 5 பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியில் காணப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? .....

30. எண்கோலத்தை இனங்கண்டு இடைவெளியை நிரப்புக.

1. 109 , 118 , ... , 136

2. ..... , 311 , 321 , ……

(30 புள்ளிகள்)

www.ikeau.lk

❋ வினா இலக்கம் 31 தொடக்கம் 60 வரையான வினாக்களின் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

31. இலங்கையராக வாழும் ஒருவரிடம் இருக்க வேண்டிய குணவியல்பு,
1. ஏனைய மதங்களை விமர்சித்தல். 2. எல்லோரையும் மதிக்காமை.
3. ஏனைய இனத்தவருடனும் மதத்தவருடனும் ஒற்றுமையுடன் இருத்தல்.

32. ஒருவர் குறைந்தளவு நீரை அருந்துவதால் ஏற்படும் பாதிப்புகளில் ஒன்று அல்லாதது,
1. சிறுநீரின் நிறம் கடும் நிறமாக இருத்தல்.
2. இலகுவாக சிறுநீர் கழிக்க கூடியதாயிருத்தல். 3. தொண்டை, வாய் உலர்தல்.

33. "ஒரே வாள் வீச்சில் தனது தலையை துண்டித்து விடுங்கள்" என்று கூறிய வீரர் யார்?
1. மொனரவில கெப்பட்டிப்போல திசாவ. 2. கொங்காலேகொடபண்டா.
3. வீரபுரன் அப்பு

34. கட்புல செவிப்புல சாதனமாக அமைவது,
1. தொலைக்காட்சி 2. வானொலி 3. செய்தித்தாள்

35. பாதுகாப்பற்ற இடமும் பாதுகாப்பற்ற சந்தர்ப்பமும் முறையே.
1. பாம்பு புற்றும் பாதசாரிகள் இடது புறமாக செல்லலும்.
2. மண்சரிவு ஏற்படும் இடமும் பாம்பு இருக்கும் புற்றும்.
3. பட்டாசு கொளுத்துதலும் பாதையின் வலது புறமாக செல்லுதலும்.

36. இலங்கையின் தேசிய கொடியின் சிவப்பு நிறம் பின்னணியால் குறிக்கப்படுவது.
1. சிங்கள மக்கள். 2. தேசிய ஒற்றுமை. 3. ஏனைய மதத்தவர்.

37. விட்டமின் C அடங்கியுள்ள உணவு கூட்டம்
1. பப்பாசிப்பழம், மாம்பழம், லாவுள். 2. தேசிக்காய், தோடம்பழம், புளிதோடை.
3. இறைச்சி, மீன், பால்

38. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் கடலுடன் கலக்கும் நதிகள் முறையே.
1. மகாவலி கங்கை, களனி கங்கை. 2. மகாவலி கங்கை, நில்வள கங்கை.
3. களுகங்கை, களனி கங்கை

39. நீர்ச்சில்லு சுழலும்போது வேகத்தை அதிகரிப்பதற்கு செய்ய வேண்டியது.
1. நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல். 2. நீரோட்டத்தின் வேகத்தைக் குறைத்தல்.
3. சுழலிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

40. பானங்கள் தயாரிக்கப் பயன்படும் பொருட்கள்.
1. வெரலு, கெக்கரி. 2. வல்லாரை சாத்தாவாரி 3. வில்வம்பூ, ரணவரா.

41. பாக்கு, பலா, எண்ணெய் ஆகிய வித்துக்கள் பரவலடையும் முறைகள்.
1. விலங்கு, நீர், காற்று. 2. நீர், விலங்கு, காற்று. 3. வெடித்தல், விலங்கு, நீர்

42. கம்பி பயன்படுத்தும் சந்தரப்பம் ஒன்று.
1. வாகனத்திற்கு கொள்கலன் ஒன்றை ஏற்றுதல்.
2. கல்லொன்றை தள்ளிக்கொண்டு செல்லுதல்.
3. கிணற்றிலிருந்து நீரை அள்ளுதல்.

www.ikedu.lk

43. மின்குமிழ் ஒன்று ஒளிரும் சந்தர்ப்பமாக அமைவது படம்
,



A படம்



B படம்



C படம்

1. A படம் 2. B படம் 3. C படம்

44. சிறிதளவு மண்ணை ஊடு காட்டக்கூடிய போத்தலினுள் இட்டு நீரை ஊற்றி நன்றாக குலுக்கி சில மணி நேரத்தின் பின் அவதானிக்கும்போது போத்தலின் அடிப்பகுதியில் படித்திருப்பது எது?
1. இலை சருகுகள் 2. பெருமணல் 3. பரல்கற்கள்

45. குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரங்கள் மற்றும் கால வேறுபாடின்றி பூக்கும் தாவரங்களை முறையே குறிப்பது
1. தென்னை, மர 2. முள்முருங்கை, வாழை 3. வாழை, ரம்புட்டான்.

46. சூழல் சுத்திகரிப்பு தொடர்பான சேவைகளை வழங்கும் நிறுவனம்.
1. பிரதேச சபை, நகர சபை 2. பிரதேச செயலகம், பிரதேச சபை
3. பொது சுகாதார உத்தியோகஸ்தர் காரியாலயம், நகர சபை

47. கீழே தரப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தில் இல 1,2 ஆகியன குறித்து நிற்கும் மாகாணங்கள்.



1. வட மத்திய மாகாணம், ஊவா மாகாணம்
2. மத்திய மாகாணம், வடமேல் மாகாணம்
3. வட மத்திய மாகாணம், மத்திய மாகாணம்

48 யோகட், பால், தயிர் ஆகியவற்றைக் கொள்வனவு செய்யும் போது மிகக் கூடியளவு கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயம் எது?.

1. தரச்சான்று, உற்பத்தி திகதி 2. உற்பத்தித்திகதி, காலாவதி திகதி.
3. காலாவதித்திகதி, தரச்சான்று.

49. இந்த படத்தில் காணப்படுபவர்,



1. கட்டுரை, கவிதை எழுத்தாளர்
2. இலவசக் கல்வியின் தந்தை
3. விஞ்ஞானியும் எழுத்தாளரும்.

50. எமது நாடு பிரித்தானியாரிடம் இருந்து விடுதலை பெற்ற வருடம்.
1. 1848 பெப்ரவரி 4 2. 1948 பெப்ரவரி 4 3. 1815 மார்ச் 15

51. பிறப்புச் சான்றிதழ் ஒன்றின் பிரதியைப் பெற செல்ல வேண்டிய இடம்.
1. பிரதேச செயலகம். 2. பிரதேச சபை. 3. கிராம சேவகர் காரியாலயம்.

52. நீர் வெறுப்பு நோயை பரப்பும் பிராணிகளாவன..

1. வெளவால், மின்மினி பூச்சி 2. நாய், நரி 3. காகம், பூனை

www.ikedu.lk

53. எமது நாட்டின் பண்டைய கால தற்காப்பு கலை.

1. அங்கம் பொர 2 கராத்தே 3. ஜூடோ.

54. இலங்கைக்கே உரித்தான தாவரக் கூட்டம்.

1. கெகட்டியா, தென்னை, ஈரப்பலா 2. ஹின்போவிட்டியா, கெகட்டியா, கொடபர

3. பலா, கொடபர, வேம்பு

55. மின்காந்தம் ஒன்றினை தயாரிப்பதற்கு தேவையற்ற பொருள்

1. இரும்பாணி 2. செப்புக்கம்பி 3. காந்தம்

56. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் வெட்டி அழிக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த தாவரம்.

1. இலுப்பை மரம் 2. எண்ணெய் மரம் 3. வேம்பு

57. வீட்டுத்தோட்ட செய்கையின் போது பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் தொகுதி,

1. மண்வெட்டி கைமுள்ளு குப்பைவாரி 2. அலவாங்கு தூக்குக்குண்டு மண்வெட்டி.

3. குப்பைவாரி, நீர்மட்டம், மண்வெட்டி

58. வீட்டுத்தோட்டத்தில் நாற்றுமேடை ஒன்றினை அமைக்கும் போது எதிர்பார்க்கப்படும் விடயம்.

1. கூட்டெரு தயாரிப்பதற்கு.

2. நேரடியாக பாத்திகளில் நடப்படும் வித்துக்களைப் பெறுவதற்கு

3. நேரடியாக பார்த்திகளில் நடப்படும் கன்றுகளை பெறுவதற்கு.

59. உடன் உணவுப்பொருட்கள் எண்ணெய், அதிக காரமான உணவுகளை உண்பதோடு குறித்த நேரத்தில் உணவு உட்கொள்ளாமையால் ஏற்படும் நோய்

1. குடற்புண் 2. நீரழிவு நோய் 3. உயர்குருதி அமுக்கம்.

60. கடற்றொழிலில் அதிக மீன்களை பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம்

1. அத்தாங்கு 2. வீச்சுவலை 3. கரப்பு.

(30 புள்ளிகள்)

61 எமது வீட்டிற்கு விருந்தினர் ஒருவர் வந்தபோது என்ற தலைப்பின் கீழ் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் எழுதுக ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை தொடர்பு சரியாக எழுதப்பட்டிருப்பதோடு, ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாமல் எழுதப்பட்டிருக்க வேண்டும்

1 .....

.....

2 .....

.....

3 .....

.....

(06 புள்ளிகள்)

www.lkedu.lk